செ.வெ.எண்: 91 நாள்: 26.09.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக முத்து அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், இன்று (26.09.2019) நடைபெற்றது. இக்கூட்டத்தில், தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரான் ஜீத் சிங் கலோன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்றுக்கொண்டார்.

மேலும், ஜுலை - 2019 மாதம் வரை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 254 மனுக்களில் வேளாண்மை சார்ந்த 143 மனுக்களும், பிறதுறைகளை சார்ந்த 111 மனுக்களுக்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் விவசாயிகளுக்கு பதில்கள் அளிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பான மழையளவு 662.20 மி.மீ, செப்டம்பர் மாதம் முடிய இயல்பான மழையளவு 237.80 மி.மீ ஆகும். 23.09.2019 வரை 91.99 மி.மீ மழை கிடைக்கப்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி சார் ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2017-2018ம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்ததில் நெல் I, நெல் II, உளுந்து, பாசிப்பயறு, மக்காச்சோளம், கம்பு, சோளம், மிளகாய், வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு மொத்தம் ரூ.79.91 கோடி இழப்பீட்டுத்தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

2018-19-ம் ஆண்டிற்கு பயிர் காப்பீடு செய்ததில் நெல் I பயிருக்கு 7 விவசாயிக்கு ரூ.14,225/- இழப்பீட்டுத்தொகை வங்கி கணக்கில் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. நெல் II பயிருக்கு 3,274 விவசாயிகளுக்கு ரூ.1.89 கோடி இழப்பீட்டுத்தொகை காப்பீட்டு நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த இழப்பீட்டுத்தொகையினை விவசாயிகளின் வங்கி கணக்கில் விரைவில் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் 2019-20ம் ஆண்டில், காரீப் பருவ பயிர்களுக்கு 108.46 எக்டர் நிலப்பரப்பிற்கு பயிர் காப்பீடு செய்துள்ளனர். பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத்திட்டத்தில் 2019-20ம் ஆண்டில் வேளாண்மைத்துறைக்கு 1100 எக்டர் பரப்பளவில் ரூ.324.89 லட்சம் மதிப்பில் நுண்ணீர் பாசன இலக்கு பெறப்பட்டு தற்போது 955.03 எக்டரில் நுண்ணீர் பாசனம் அமைக்க பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கம் 2019-20ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 32 தொகுப்புகள் அமைக்க இலக்கு பெறப்பட்டு அதன்படி விவசாயிகள் தேர்வு நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. கோடை உழவு பணிகள் 32,000 எக்டரில் நடைபெற்று வருகிறது. கோடை உழவு மானியம் பின்னேற்பு மானியமாக ஏக்கருக்கு ரூ.500 வீதம் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். மேலும், தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் 50 சதவீத மானியத்தில் இழை பருத்தி விதைகள் கிலோவிற்கு ரூ.110ம், ஊடுபயிர் விதைக்கு அதிகபட்சம் 50 சதவீத மானியத்தில் கிலோவிற்கு ரூ.50, ஒரு எக்டருக்கான நுண்ணூட்ட உர விநியோகத்திற்கு ரூ.500ம், உயிர் உர விநியோகத்திற்கு ரூ.150ம், உயிரியல் காரணிகள் ரூ.500ம், பருத்தி வயல்களில் மருந்து தெளிக்க ரூ.1000ம், பருத்தி வயல்களில் களைக்கொல்லி தெளிக்க ரூ.500ம் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் 2019-20ல் ரூ.36.850 இலட்சம் இலக்கு பெறப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கூட்டுப்பண்ணையத் திட்டத்தின்கீழ் 2019-20ம் ஆண்டிற்கு 165 உழவர் ஆர்வலர் குழுக்களும், 33 உழவர் உற்பத்தியாளர் குழுக்களும் அமைக்க இலக்கு பெறப்பட்டு உழவர் ஆர்வலர்கள் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கான வங்கிக் கணக்கு தொடங்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், பிரதம மந்திரியின் சிறு/குறு விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் 18 வயது முதல் 40 வயது வரை உள்ள சிறு/குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 60 வயதுக்குப்பின் மாதந்தோறும் ரூ.3000/- ஓய்வூதியம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சிறு/குறு விவசாயிகள் பிரதம மந்திரியின் சிறு/குறு விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக்கொண்டு பயன்பெற வேண்டும் என தூத்துக்குடி சார் ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.தனபதி, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை (பொ)) திரு.ஆசிர் கனகராஜன், கோட்டாட்சியர்கள் திருமதி விஜயா (கோவில்பட்டி), செல்வி.தனப்ரியா (திருச்செந்தூர்), மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சு.பாலசுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**